2002 அக்டோபர் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அது என் ஆய்வில் இருக்கிறது. இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். அது என் ஆய்வில் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர்.

3. விதி 111-ன்கீழ் திருத்த அறிக்கை

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அலுவலக கூடுதல் ஆணையர் பதவிக்கு அங்கீகாரம் வழங்கும் சட்டத் திருத்தம் குறித்து அத்துறை அமைச்சர் திருத்த அறிக்கை

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் சட்டமன்றப் பேரவை விதி 111ன்கீழ் திருத்த அறிக்கையைச் சமர்ப்பிக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிக்கையை முடித்து விடட்டும்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: 25-10-2002 ஆம் தேதி அன்று சட்டமன்றப் பேரவையில் 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்தியபோது, பின்வருமாறு என்னால் தெரிவிக்கப்பட்டது.

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே திருக்கோவில்களுக்கு இருக்கின்ற 4 இலட்சத்து, 76 ஆயிரம் ஏக்கருக்கு மேல் இருக்கிற நிலங்களைச் சரிபார்த்து, அவற்றை எடுப்பதற்காகத்தான் இப்படிப்பட்ட ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை இங்கே நியமித்திருக்கிறார்களே தவிர, புதிய பொறுப்பிற்கு, புதிய பணிகளில் யாரும் நியமிக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுகுறித்துப் பின்வருமாறு திருத்த அறிக்கையை இந்தப் பேரவையின்முன் அளிக்கிறேன்.

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தில், தமிழ்நாடு சட்டம் 22/1959, கூடுதல் ஆணையர் என்ற பணியிடம் குறிப்பிடப்படவில்லை. கடந்த 7.7.1997 அன்று இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அலுவலகத்தில் ஒரு கூடுதல் ஆணையர் பணியிடம் பதவி உயர்வின் மூலம் நிரப்பப்படும் வகையில் ஓர் இணை ஆணையரைக் கூடுதல் ஆணையராகப் பதவி உயர்வில் நியமித்து ஆணையிடப்பட்டது. இந்தப் பணியிடத்தை 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தில் இணைக்க ஏதுவாக இச்சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டது. இப்பணியிடத்தில்

7-7-1997 ஆம் ஆண்டு முதல் கூடுதல் ஆணையர் பணியாற்றி வந்தாலும், அவருடைய பதவி மற்றும் அவருடைய பணிகள் குறித்து இந்து சமய அறநிலைக் கொடைகள் வரையறுத்துச் சொல்லப்படவில்லை. எனவே, அவரது பதவிக்கும், அவரது பணிகளுக்கும் சட்டபூர்வமான அங்கீகாரம் அளிக்கும் பொருட்டு, இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத் திருத்தம் தேவைப்படுகிறது. அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில், அறநிலையத் துறைப் பணியாளர்களுக்கான ஊதியம் முதலில் அரசால் வழங்கப்பட்டாலும், பின்னர் திருக்கோவில் உபரி நிதியிலிருந்து அரசுக்குத் திரும்பச் செலுத்தப்படுகிறது. எனவே, இந்தச் சட்டத் திருத்தத்தினால் எந்தவிதமான கூடுதல் செலவுகளும் அரசுக்கு ஏற்பட வாய்ப்பில்லை. ஏற்கெனவே உள்ள கூடுதல் ஆணையர் பதவிக்குச் சட்டபூர்வமான அங்கீகாரம் மட்டும் அதிகாரிகளுக்கு வழங்குவதற்காகத்தான் இந்தச் சட்டத் திருத்தம் தேவைப்படுகிறது.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) சாலைப் பணியாளர்கள் பணி நீக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு)

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைப் பணியாளர்களுடைய பணி நீக்கம் குறித்தும், மற்றைய....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள்.

4. கவன ஈர்ப்பு

வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தொடங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இ. புகழேந்தி, கொடுத்திருக்கிறீர்கள். அமைச்சர் வரவில்லை. கேட்டுச் சொல்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.